சார்பு நீதிமன்றம், மேலூர்

OS No. 67/2022

பெயர் :மாரிமுத்து
தகப்பனார் பெயர் :பெரியபுலியன்
கணவர் பெயர் :
வயது :68
கிராமம் :கருத்தபுலியன்பட்டி
வட்டம் :மேலூர்
தொழில் :விவசாயகூலி

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

27.11.2025

பி.வா.சா.2 முதல் விசாரணை:

நான் இந்த வழக்கில் பிரதிவாதி தரப்பு 2வது சாட்சி. என்னுடைய முதல் விசாரணையை எழுத்து வடிவ பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் கண்ட சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டது தான். அதில் கண்ட சங்கதிகளை எல்லாம் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். எனது ஆதார் அட்டை ஒளிநகல் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

குறுக்கு விசாரணை :

அழகர், மற்றும் சௌந்திர பாண்டியன் இருவரையும் நான் பிறந்தது முதலே தெரியும். அழகர் மற்றும் சௌந்திரபாண்டியன் இருவருமே நண்பர்களா என்றால் நண்பர்கள் தான். அழகரும், சௌந்திரபாண்டியனும் பத்திரம் எழுதி கொண்ட விபரம் தெரியுமா என்றால் தெரியும். நான் சாட்சியாக ஏதேனும் கையெழுத்து செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் பிரதிவாதியான சௌந்திரபாண்டியன் என்ன வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்பது தெரியுமா என்றால் தெரியும். பிரதிவாதி தன்னுடைய வாக்குமூலத்தில் வாதியும், பிரதிவாதியும் பேசி என்னுடைய முன்னிலையில் 3 லட்சம் ரூபாய் கடன் பெற்றதாக குறிப்பிட்டுள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியும். இந்த வழக்கானது, பிரதிவாதி தரப்பு பொய்வழக்கை ஜோடனை செய்வதற்காக என்னை அழைத்து சாட்சியாக

விசாரணை செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் அப்பட்டமான பொய் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.11.27 20:41:34 +0530

Sub Judge

Melur